**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2022-2023 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – விழுப்புரம், திண்டுக்கல், நாமக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அடிப்படை வசதிகளான புதிய ஆழ்துளை கிணறு, தண்ணீர் தொட்டி அமைத்தல் – ரூ.274.05 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் ப.மே1(2)] துறை**

**அரசாணை (ப) எண்.152** **நாள் 02.08.2022**

ஆடி மாதம் 17-ஆம் நாள்,
சுபகிருது வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2053

**படிக்கப்பட்டது :-**

பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண்.பமே/அ3/ 5009/2021, நாள் 22.02.2022

*****

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், விழுப்புரம் மாவட்டத்தில், மரக்காணம் ஒன்றியத்தில் சீத்தாபுரம், தென்னேரி, வரகுப்பட்டு, இந்திராநகர், குருவம்மா பேட்டை இருளர் பகுதியில் புதிய ஆழ்குழாய் கிணறு மற்றும் தண்ணீர் தொட்டி அமைக்க ரூ.17.90 இலட்சமும், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், அடுக்கம் ஊராட்சி, தாமரை குளம் பழங்குடியினர் குடியிருப்புக்கு தண்ணீர் தொட்டி (13,500 லிட்டர்) மற்றும் பைப் லைன் நீட்டிக்கும் பணி மற்றும் கேசிப்பட்டி கீழ்மலை ஊராட்சியில் கோரங்கொம்பு பழங்குடியினர் குடியிருப்புக்கு பைப் லைன் அமைக்க ரூ.12.30 இலட்சமும், நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், மலைவேப்பன்குட்டை கிராமத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் வசதி ஏற்படுத்த ரூ.5.20 இலட்சமும், நடுகோம்பை ஊராட்சியில் புதிய ஆழ்துளை கிணறு 32 நபர்களுக்கு வழங்க ரூ.64.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.69.20 இலட்சமும், ஈரோடு மாவட்டம், டி.என்.பாளையம் ஊராட்சி, தாளவாடி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் வசதி, சமுதாய கிணறு அமைக்க ரூ.174.65 இலட்சம் ஆக மொத்தம் ரூ.274.05 இலட்சம் 2021-2022-ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் வருவாய் கணக்குத் தலைப்பின்கீழ் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பழங்குடியின நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதனடிப்படையில், விழுப்புரம், திண்டுக்கல், நாமக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அடிப்படை வசதிகளான புதிய ஆழ்துளை கிணறு, தண்ணீர் தொட்டி அமைப்பதற்கு ரூ.2,74,05,000/- (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தி நான்கு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) 2022-2023 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | மாவட்டம் | பணி விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | விழுப்புரம் | புதிய ஆழ்துளை கிணறு மற்றும் தண்ணீர் தொட்டி அமைத்தல் | 17.90 |
| 2 | திண்டுக்கல் | தண்ணீர் தொட்டி, பைப் லைன் அமைத்தல் | 12.30 |
| 3 | நாமக்கல் | ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டாருடன் குடிநீர் வசதி செய்தல் | 69.20 |
| 4 | ஈரோடு | ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் வசதி மற்றும் சமுதாய கிணறு அமைத்தல் | 174.65 |
| | | மொத்தம் | 274.05 |

(ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தி நான்கு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்)

3. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 02 பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் - மாநிலச் செலவினங்கள்- JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 309 - உதவித்தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை."**

(IFHRMS த.தொ.கு. 2225 02 796 JY 30901)

4. மேலே பத்தி 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று சம்மந்தப்பட்ட திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான பணிகளை மேற்கொள்ள உரிய செயல்முறை ஆணையினை வெளியிடுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 38292/நிதி[ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்]/2022, நாள் 30.07.2022-இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம்,
சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர்கள்,
விழுப்புரம், திண்டுக்கல், நாமக்கல், ஈரோடு,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
திண்டுக்கல், ஈரோடு,
திட்ட அலுவலர்கள், பழங்குடியினர் நலம்,
விழுப்புரம், நாமக்கல்,
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-600 018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 008.

<u>நகல்</u>
ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சென்னை – 600 009.
நிதி [ஆதி(ம)பந / வ.செ.பொது-II] துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/அநமு1) துறை,
சென்னை-600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/8/2022
பிரிவு அலுவலர்
02/08/2022